தனிப்பிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா- ரூ. 200/-

# முத்தமிழ் நேசன்

டிசம்பர் 2022 மலர் 1 இதழ் 11 இனிக்கும் இலக்கிய இதழ்

## திருச்சியைக் கலக்கிய
## அமெரிக்க முத்தமிழ் இலக்கிய பேரவையின் இலக்கிய மாநாடு!



## மொழியுணர்வும் இன உணர்வும் நம் சொத்து!

-தாழையார் நூல் வெளியீட்டு விழாவில்

## இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் முழக்கம்

மனித நேயம் கொண்டு
அன்பினை வளர்ப்பார்!
மண் மீதில் எந்நாளும்
ஒற்றுமை நாட்டுவார்!

துயரம் கண்டால்
கண்ணீர் வடிப்பார்!
தன்னுயிர் கொடுத்துமே
ஈகைகள் செய்வார்!



– தாழை இரா. உதயநேசன்

# முத்தமிழ் நேசன்

**இனிக்கும் இலக்கிய இதழ்**

டிசம்பர் 2022 மலர் I இதழ் II



**நிறுவனர்**

**தாழை இரா.உதயநேசன்**

**ஆசிரியர்**

த.அமுதா

**ஆசிரியர் குழு**

முனைவர்

ஜோ.சம்பத்குமார்

கவிஞர் செ.வீரமணி

த.ஓவியா

**வடிவமைப்பு**

ம.சேவியர்

**அச்சு**

M.S ஆப்செட் ராயப்பேட்டை



**அலுவலக முகவரி**

முத்தமிழ் நேசன்

எண்:10, முதல் தெரு,ஸ்ரீராமபுரம்

ஆம்பூர் - 635 802

திருப்பத்தூர் மாவட்டம்


## தலையங்கம்

'அன்பை விதைப்போம்' என்ற முழக்கத்தோடு திருச்சியில் இரண்டு நாள் இலக்கிய நிகழ்வை ஒரு மாநாடாக நடத்திக் காட்டியிருக்கிறது அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை. இதில் ஏறத்தாழ 10 நூல்கள் வெளியிடப்பட்டதோடு, நம் நிறுவனர் தமிழ்மாமணி உதயநேசன் அவர்கள் தொகுத்த108 உலகளாவிய கவிஞர்களின் ஹைக்கூக் கவிதைகளின் பெருந்தொகுப்பான 'சிறகு முளைத்த வானமும்' கோலாகலமாக வெளியானது. இதில் ஏறத்தாழ 400-க்கும் மேற்பட்டவர்கள் விருதளித்துச் சிறப்பிக்கப்பட்டார்கள். இப்படியொரு விழாவா? என்று இலக்கிய உலகமே வியந்தது.

அதேபோல் நம் நிறுவனர் ஐயா அவர்கள் எழுதிய தெம்மாங்குக் 'பூவோடு பேசும் பூஞ்சிட்டு 'கவிதை நூலும், இசையமைக்கப்பட்ட அவரது 2 தெம்மாங்குப் பாடல்களும் சென்னையில் பல்வேறு பிரபலங்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டன.

இவையெல்லாம் ஐயா அவர்கள் கண்ட கனவுகள். அவரது உயர்ந்த எண்ணங்கள் எட்டியிருக்கும் மகத்தான வெற்றிகள். அவரது இந்த வெற்றிகள் நமக்கான வெற்றிகளாக இருப்பதுதான் இதில் வியப்பு. இனி வரும் புத்தாண்டையும் நம் உலகமே மகிழ, இலக்கியத்தால் கொண்டாடுவோம்.

**த.அமுதா**

ஆசிரியர்

இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள்,

யுனிகோட் ( unicode ) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.

படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

**mutamilnesan2022@gmail.com**

# கல்லடுக்கி வைப்பதல்ல கவிதை!



வெற்றுவரி சொல்வதற்கேன் கவிஞன் நாக்கு?
வெளிச்சத்தைத் தேக்கிவைத்துஇருட்டைத் தின்ன
கற்றையெனத் துப்பவேண்டும்லேசர் வீச்சு!
கரித்துகளை வைரமாக்க அழுத்தப் பேசு!
ஒற்றைவரி எழுதினாலும்எழுத்துக் குள்ளே
ஓராயிரம் கண்ணிவெடிப் பூக்கள் கட்டு!
கற்றகவி கலைக்கென்றால்நடையைக் கட்டு!
கந்தகத்தில் சொல்லெடுநீ!நெருப்பை நட்டு!

சொல்லடுக்கி வைப்பதல்ல உன்றன் வேலை!
சொக்கவைக்கும் மந்திரச்சொல் மாலை கட்டு!
வில்லடுக்கி வைப்பதல்ல வீரம்! வீணே
விளையாட்டில் கழிவதில்லை காலம்! நாளை
வெல்லவேண்டும் ! வழிநாமும் சொல்ல வேண்டும்!
வேறெதற்கு நாமெழுத வேண்டும்? சும்மா
கல்லடுக்கி வைப்பதல்ல கவிதை! வா!வா!
கற்பித்தே ஒன்றுசேர்த்துக் களத்தைத் தீட்டு!

புளியேப்பத் தத்துவங்கள் பசிதீர்க் காது!
பூங்காற்றே அனற்புயலின் திசைமாற் றாது!
களியேப்பக் கற்பனைகள் கனவேப் பங்கள்
காலத்தின் இருண்டவீடு !ஒளியேற் காது!
வலியேற்கும் தோள்வரிக்கே வாழ்நாள் கெட்டி!
வாவாநீ!முறுக்கேற்று வரிகள் கொட்டு!
உளிச்சத்தம் இல்லாமல் சிலைசெ துக்கு!
ஊர்முழுக்க உன்சிலைதான் ! வேறெ வர்க்கு

– கவிக்கோ **துரை வசந்தராசன்**






# பூவோடு பேசும் பூஞ்சிட்டு

## தெம்மாங்கு நூல் மற்றும் பாடல் வெளியீட்டு விழா குறித்தான பதிவுகள்

- முனைவர் ஜோ.சம்பத்குமார்

அமெரிக்க முத்தமிழ்க் குழுமங்களின் நிறுவனர் தமிழ்மாமணி தாழை இரா.உதயநேசன் அவர்களின் "பூவோடு பேசும் பூஞ்சிட்டு" தெம்மாங்கு நூல் மற்றும் பாடல் வெளியீட்டு விழாவை தமிழ்நாடு திரைப்படப் பாடலாசிரியர் சங்கம், வட சென்னைத் தமிழ்ச் சங்கம் மற்றும் நிலா வட்டம் இணைந்து சென்னை கிரீம்ஸ் துகார், 5 ஆம் தளம் கிரீம்ஸ் ரோட்டில் அமைந்துள்ள இந்துஸ்தான் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அரங்கத்தில் 16.11.2022 அன்று புதன் கிழமை மாலை 5 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மதிப்புறு முனைவர் ஒவியக் கவிஞர் அமுதபாரதி அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். இவ்விழாவிற்கு இனிய உதயம் பத்திரிக்கையின் ஆசிரியர் மதிப்புறு முனைவர் ஆரூர்தமிழ்நாடன் அவர்கள் முன்னிலை வகுத்தார்.

இந்நிகழ்விற்கு வருகைப்புரிந்தவர்களை இன்முகத்தோடு வட சென்னைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் எழுத்தாளர் எ.த.இளங்கோ அவர்கள் வரவேற்று பேசினார். "பூவோடு பேசும் பூஞ்சிட்டு" என்னும் தெம்மாங்கு நூலினை திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் அவர்கள் வெளியீட அதனை இசையமைப்பாளர் தாஜ்நூர் அவர்கள் பெற்றுக் கொண்டு இருவரும் இந்நூல் குறித்தான மதிப்புரைகளும் வழங்கினார்கள். இந்நூலில் உள்ள தெம்மாங்கு பாடலை டி.எஸ் மணிமாறன் அவர்களின் இசையால் புகழ்ப்பெற்ற கிராமிய

பாடகர் கலைமாமணி வேல்முருகன் அவர்களால் பாடிய இசை தட்டை நடிகர், இயக்குநர் யார் கண்ணன் அவர்கள் வெயீட டி.கே.எஸ் கலைவாணன் அவர்கள் பெற்றுக் கொண்டு இப்பாடல் குறித்தான விளக்கத்தையும் சிறப்பையும் எடுத்து இயம்பினார்கள். வாழ்த்துக்கவிதையை பாடலாசிரியர் கவிஞர் திரு இளைய கம்பன் , மதிப்புறு முனைவர் கவிஞர் ஜலாலுதீன் அவர்களும் வாசித்தார். கலைமாமணி ஏர்வாடி ராதாகிருஷ்ணன், எழுத்தாளர் முனைவர் ஆண்டாள் பிரியதர்ஷினி, கிராமிய பாடகர் கலைமாமணி வேல்முருகன் போன்றோர் உள்ளிட்ட பல்வேறு சான்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தெம்மங்கு நூல் வெளியீட்டு விழாவில் கவிஞர் ஜெயபாஸ்கரன், மதிப்புறு முனைவர் கவிஞர் உமா பாரதி, முனைவர் செ.சு.நா.சந்திரசேகரன், முனைவர் சம்பத்குமார், பாவலர் நீலகண்டத் தமிழன் ஆகியோர்கள் இந்நூல் குறித்தான சிறந்த வாழ்த்துரைகளை வழங்கி சிறப்பித்தனர். பின்னர் அமெரிக்க முத்தமிழ்க் குழுமங்களின் நிறுவனர் தமிழ்மாமணி முனைவர் தாழை இரா.உதயநேசன் அவர்கள் இவ்விழாவில் பேசிய சான்றோர்களின் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு அதற்கான ஏற்புரையை வழங்கினார். இந்நிகழ்வை மிகச் சிறந்த முறையில் கவிஞர் புனிதஜோதி அவர்கள் தொகுத்து வழங்கினார். நிறைவாக கவிஞர் தமிழ் அமுதன் (பாடலாசிரியர்) அவர்கள் நன்றியுரை வழங்கி நிறைவுற்றது இவ்விழா. மேலும், ராஜேஸ் அட்சயா உள்ளிட்ட பாடகர்களும் இந்நூலில் உள்ள வரிகளை பாடல்களாகப் பாடிய பாடல்களும் இவ்விழாவில் அரங்கேற்றப்பட்டது. இந்நிகழ்வு குறித்தான முழுமையான பதிவு ஆக்கங்கள் அமெரிக்க முத்தமிழ்த் தொலைக்காட்சி நேரலையில் வெளியிடப்பட்டுள்ளது.
















அமெரிக்க முத்தமிழ்க் குழுமங்களின் நிறுவனர்
தாழை இரா.உதயநேசன்
பூவோடு பேசும் பூஞ்சிட்டு
தெம்மாங்கு நூல்


அமெரிக்க முத்தமிழ்க் குழுமங்களின் நிறுவனர்
தாழை இரா.உதயநேசன்
பூவோடு பேசும் பூஞ்சிட்டு




HCC


HCC
1945 - 2020
Progress Through Enterprise


TODAY


TODAY
MEDIA








அமெரிக்க முத்தமிழ்க் குழுமங்களின் நிறுவனர்
தமிழ்மாமணி






தாழை இரா.உதயநேசன்
அவர்களின்


HCC
Progress Through Enterprise




# திருச்சியில் ஓர் இலக்கிய மகோற்சவம்



—ரேணுகா ஸ்டாலின்

சிலுசிலு காற்றோடும் சில்லென்று மேனி தீண்டும் சாரலோடும் வான்மகள் வாழ்த்துத் தெரிவிக்க, அழகியதோர் அந்திமாலையில் கவிமகள் உற்சவம் திருச்சி மலைக்கோட்டை மாநகரை கலைக்கோட்டை நகராக்கியது,

அருண் ஓட்டலில் உள்ள சுமங்கலி மகாலில் இரு தினக் கொண்டாட்டமாக நவம்பர் 05, 06, ஆகிய நாட்களில் அந்த அதி அற்புத இலக்கியத் திருவிழா அரங்கேறியது.

தேர்த்திருவிழா, ஊர்த்திருவிழா கேள்விப்பட்டு இருக்கிறோம். அதென்ன இலக்கியத் திருவிழா!!? உங்கள் மனவோட்டம் எங்கள் செவிகளுக்கு கேட்கிறது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை மட்டுமல்ல. கடல் கடந்தும், கண்டங்கள் கடந்தும் வந்த இலக்கிய உலகின் அத்தனை ஆளுமைகளும் ஒன்றிணைந்த நிகழ்வினை இலக்கியத் திருவிழா என்பதைத் தவிர வேறு என்னென்று சொல்ல? வார்த்தைகள் கிடைக்கவில்லை .

நவம்பர் மாத பருவ மழையோடு அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை குழுமங்களின் முதலாம் ஆண்டுவிழாவின் இலக்கிய மழையிலும் கவி மழையிலும், கவின்மிகு ஆளுமைகளின் வாழ்த்து மழையிலும் நனைந்து மகிழ்ந்தனர் கவியுறவுகள்.

5 ஆம் தேதி சனிக்கிழமை மிகச் சரியாக 5 மணியளவில் கவித் திருவிழா நிகழ்வின் தொடக்கமாக, மங்கல விளக்கேற்றுதல். புதுமைகளின் புகழிடமான குழுமத்தில், முற்றிலும் புதுமையாக, காலங்காலமாக மக்கள் மனதில் புரையோடிப் போயிருந்த மூடப்பழக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துத் தகர்த்தெறியும் விதமாக, குழுமத்தின் நிர்வாக வெண்புறாக்களை ஒன்றிணைத்து, வண்ணத்தூரிகையும் வானவில் தோரணமுமாய் விழாவைத் தொடங்கியது புதுமை மட்டுமல்ல புரட்சியான ஒன்றுமாகும். இது எங்கும் காணாத நெகிழ்ச்சி.

தீபத்தில் ஒளி விளக்கு ஏற்றுவதற்காக தென்குமரிக் கவிதை தளத்தின் ஆளுமை திருமதி அருணா ரகுராமன், கவிதைச்சாரல் குழுமத்தின் நிறுவனர் திருமதி பேச்சியம்மாள் பிரியா, திருமதி மோகனா, திருமதி இந்திராணி தங்கவேல், திருமதி கிரிஜா, திருமதி பாண்டிச்செல்வி கருப்பசாமி ஆகியோரின் முதல் ஆசியுடன் விழா இனிதே துவங்கியது.

அதனைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஹைக்கூ கவியுலகின் முடிசூடா மன்னர், மதிப்புறு முனைவர் ஓவியக்கவிஞர் அமுதபாரதி அவர்களின் தலைமையில், நமது ஹைக்கூ பேரவையின் தொடர் நடுவர்கள் மற்றும் ஆகச்சிறந்த அற்புத ஆளுமைகளின் முன்னிலையில் மாபெரும் ஹைக்கூ கவியரங்கம் நிகழ்ந்தேறியது.

இந்நிகழ்வில் ஏறத்தாழ 48 கவிஞர்கள் தங்களின் சிறந்த கவிதைகளை வாசித்து அமுதபாரதி ஐயாவின் வாழ்த்தில் அகம் மகிழ்ந்தனர். நிகழ்வினை ஹைக்கூ பேரவையின் நிர்வாக இயக்குநர் ரேணுகா ஸ்டாலின் தொய்வின்றிச் சிறப்புறத் தொகுத்து வழங்கினார்.

கவிதைகளை மட்டுமல்ல கலைகளையும் நேசித்து சுவாசிக்கும் நமது நிறுவனரின் சீரிய திட்டமிடலில் சிறப்பானது. கவித்திருவிழாவில் கணநேரம் கலைத்திருவிழாவையும் கவிஞர்கள் கண்டு ரசித்திட, நாட்டுப்புறக் கலைகளுக்கு இடமளித்திருந்தார். மாநில நல்லாசிரியர் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்ற சிறந்த ஆசிரியர், கவிஞர் ஷாஜஹானின் தப்பாட்டத்துடன் நாட்டுப்புறக் கலைகளில் முதல்நிலை பெற்ற கரகாட்டம் அனைவரையும் மெல்ல துள்ளாட்டம் போட வைத்தது.

கவியுலகில் பிரவேசிக்கும் ஒவ்வொருவருடைய கனவும் ஒரு நூலாவது வெளியிட்டு உலகோர் போற்ற உயர வேண்டும் என்பதாகத்தான் இருக்கும். அப்படியொரு கனவுடன் கவியுலகில் கால்பதித்து உலாவும் 108 கவிஞர்களின் இதயத்துடிப்பாக வெளியானது “சிறகு முளைத்த வானம்” ஹைக்கூ தொகுப்பு. இந்நூலினை திறமையாளர்களை தேடித்தேடி கௌரவிக்கும் நமது நிறுவனர் தமிழ்மாமணி தாழை இரா.உதயநேசன் ஐயா வெளியிட, திகில் திரைப்படங்களில் திருப்புமுனை ஏற்படுத்திய இயக்குனர் யார் கண்ணன் பெற்றுக்கொண்டு வாழ்த்தினார்.

தொடர் புத்தக வெளியீட்டிடையே பாலயுவ புரஸ்கார் விருதாளர் முனைவர் மு.முருகேஷ் சிறப்புரையாற்றினார். கவிஞர்கள் சிந்தை மயங்கி லயித்தனர் என்றால் அது மிகையல்ல.

அன்றைய தினம் கவிஞர் பாண்டிச்செல்வி கருப்பசாமியின் “நினைவின் சுமைகள்” சிறுகதை நூல், ஆரூர் தமிழ்நாடனின் “வலியின் புனை பெயர் நீ” குறுங்கவிதை நூல், மருத்துவர்

கவிஞர் கவிநிலா மோகனின் “இதயம் மீட்டும் இயைபுகள்” லிமரைக்கூ தொகுப்புநூல் மற்றும் “நிறம் தேடும் மலர்கள்” ஹைக்கூ நூல் என ஆளுமைகளின் அற்புத நூல்கள் வெளியிடப்பட்டன.

வெளியிடப்பட்ட நூல்கள் அனைத்தையும் குழுமத்தின் நிறுவனர் வெளியிட, முறையே முத்தமிழ் நேசன் இதழாசிரியர் அமுதா தமிழ்நாடன், பேராசிரியர் சம்பத்குமார், கவிஞர் மோகனா, மற்றும் கவிஞர் லதா ஆகியோர் நூலினைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கிட, நூல் வெளியீடு இனிதே நிறைவுற்றது. தொகுப்பு நூலில் இடம்பெற்ற கவியுறவுகளுக்கு முத்தமிழ் ஹைக்கூ போரொளி விருதுச் சான்றிதழும், புத்தகமும் நம் பேராளுமைகளின் கரங்களில் வழங்கப்பட்டது மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியும் மிக்கது.

அதனைத் தொடர்ந்து அடாத மழையிலும் விடாது கவிமழை பொழிவோம் என காத்திருந்த கவிஞர்கள், அனைவராலும் நேசிக்கப்படும் மரபு ஆசான் மரபு மாமணி, ஆண்டுவிழா நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் தசாவதானி சரஸ்வதி பாஸ்கரன் தலைமையில் ‘முத்திரை பதிக்கின்ற முத்தமிழ் வாழ்கவே” எனும் தலைப்பில் நடுநிசி வரை தொய்வில்லாமல் கவிபாடி மகிழ்ந்தனர்.

கவிஞர்கள் அகங்குளிர, ஆசைகள் நிறைவேறிய மகிழ்ச்சியில் அன்றைய நிகழ்வு அசத்தலாக நிறைவடைந்தது.

மறுநாளான 06 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை சரியாக காலை 9.00 மணிக்கு, முதல் நாளின் கொண்டாட்டமும் குதூகலமும் சற்றும் குறைவின்றி அரங்கம் நிறை ஆளுமைகளுடன் அரங்கேறியது.

“குழல் இனிது யாழ் இனிது என்பார் மழலைச் சொல் கேளாதோர்” கொஞ்சும் மழலைகள் புடைசூழ புத்துணர்வுடன் முதல் நிகழ்ச்சியாக சிறுமி மோனிகா பரதநாட்டியமும், மற்றொரு சிறுமி மோனிகா வயலின் இசையுடன், சிறுமி ஜனனி வாய்ப்பாட்டுடன் இனிதே துவங்கியது சிறுவர் பேரவை.

சிறுவர் பேரவை நிர்வாக இயக்குனர் ஞா.விஜயகுமாரி வரவேற்புரை வழங்கிட “முத்தமிழே வாழ்க” எனும் தலைப்பில் மழலையர் கவியரங்கம் தொடங்கியது.

மிகச்சிறந்த படைப்பாளி பன்முக ஆளுமை முனைவர் ஓசூர் மணிமேகலை குழந்தையோடு குழந்தையாக மாறி தலைமையேற்று கவியரங்கினை சிறப்புற நிகழ்த்தினார்.

கவியரங்கம் நிறைவுற்றதும் மழலையர் மனம் மகிழும் வண்ணம் அவர்களை கௌரவித்து விருதுகள் வழங்கப்பட்டன.

அடுத்த நிகழ்ச்சியாக அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவையின் அவையினை அலங்கரிக்க சிறப்பு விருந்தாளர்கள் சான்றோர் பெருமக்களான ஓவியக்கவிஞர் அமுதபாரதி, தமிழ்ப் பல்கலைக்கழக பேராளுமை குறிஞ்சி வேந்தன், பாலயுவ புரஸ்கார் விருதாளர் மு முருகேஷ், ஊடகவியலாளர் கவிஞர் ஆரூர் தமிழ்நாடன், முத்தமிழ் நேசன் ஆசிரியர் அமுதா தமிழ்நாடன், திரைப்பட இயக்குனர் “யார்” கண்ணன், அருட்திரு பிலிப் சுதாகரன், அற்புத பேராளுமை வெற்றிப்பேரொளி, கவிஞர் ராணி லக்ஷ்மி ராம்பிரசாத் என மேடை முழுவதும் மிகப்பெரிய ஆளுமைகளால் நிறைந்திருந்தது.

அடுத்த நிகழ்வாக சாதனையாளர்கள் விருது வழங்கும் விழாவாக சாதனையாளர்கள் ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்தலும், பின் ஏற்புரையும் மிகச் சிறப்பாக அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவையின் நிறுவனர் தலைமையில் மிக அழகாக நடந்தது.

இதில் வாழ்நாள் சாதனையாளர்களாக பாவலர் தஞ்சை தர்மராசன், கவிஞர் கோவிந்தம்மாள் ரத்தினம், திருமதி மங்கள மேரி, கவிஞர் நீலகண்ட தமிழன், திருமதி வாழ்வரசி பாண்டியன், மருத்துவர் கவிக்கோ ஜெயக்குமார் பலராமன், முனைவர் செ சு நா சந்திரசேகரன், எ த இளங்கோவென எட்டுத்திக்கும் இருந்து வந்திருந்த எட்டு பேராளுமைகளுடன் பாவலர் வீரா பாலச்சந்திரனும் மேடையில் அமர்ந்திருந்தனர்.

அவர்களை அறிமுகப்படுத்துதல் நிகழ்வில் பேச்சியம்மாள் பிரியா அவர்கள், முனைவர் சரஸ்வதி பாஸ்கரன், தாமரைச்செல்வி, பாண்டிச்செல்வி கருப்பசாமி, கல்பனா தர்மேந்திரா, கவிதா வேணுகோபாலென ஒவ்வொருவரும் எடுத்துரைத்த விதம் அரங்கையே அதிர வைத்தது.

மதிய விருந்து சரியாக 1.30 மணிக்கு, செவிக்கு உணவிட்ட ஆளுமைகளும் உடன் அமர வந்திருந்த அனைத்து கவிஞர்களும் வயிறார உணவு உண்பதற்கு அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.

மதிய இடைவேளை முடிந்தவுடன் மீண்டும் அரங்கம் நிறைய சிறப்பு விருந்தினர்களின் சிறப்புரை செவிக்கு விருந்தாகியது.

ஒவ்வொருவராக குறிஞ்சி வேந்தன், ஆரூர் தமிழ்நாடன், யார் கண்ணன் கவிதா ராஜசேகர், கவிஞர் ஜோசப், கவி செல்வா, கவிஞர் ஸ்ரீதேவி அவர்கள் மற்றும் நம்முடைய அமெரிக்க முத்தமிழ் நிறுவனர் உதய நேசன் அவர்களுடைய உரையுடனும் அனைவருக்கும் சிறந்த முறையில் சிறப்பு செய்யப்பட்டது.

அடுத்த நிகழ்வாக விருது வழங்கும் விழா முதலில் நல்லாசிரியருக்கான டாக்டர் இராதா கிருஷ்ணன் விருதை பட்டியல் படி சிவக்குமார் அவர்கள் எடுத்துரைக்க 68 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது அளிக்கப்பட்டது என்பதை மிகப் பெருமையுடன் கூறிக் கொள்கிறோம் .

அடுத்ததாக அமெரிக்க முத்தமிழ் தொலைக்காட்சி விருது பட்டிமன்றம், விவாத மேடை, ஏணிப்படிகள் நிகழ்ச்சி என அதில் பங்கு பெற்றோர் அனைவருக்கும் அளிக்கப்பட்டது.

குழுமம் தொடங்கியது முதல் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் அனைத்து கவிஞர்களுக்கும் மிகச் சிறப்பான முறையில் முத்தமிழ் விருது அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

அமெரிக்க முத்தமிழ் குழுமங்களின் நிறுவனர் உதயநேசன் அவர்களின் வாழ்த்தோடு முனைவர் சம்பத்குமார் அவர்களின் நன்றியுரையுடன் அமெரிக்க முத்தமிழ் இலக்கிய பேரவை குழுமங்களின் முதலாம் ஆண்டுவிழா கவிஞர்கள் அனைவரும் மலைச்சாரலில் நனைந்த மலர்களைப் போன்று சிரித்த முகத்துடன் தங்கள் இடம் நோக்கி நகர்ந்திட இருநாள் விழா இனிதே நிறைவுற்றது.


அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்கள்






குழுமங்கள்


குழுமங்கள்




அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்கள்
முதலாம் ஆண்டு விழா


குழுமங்கள்










அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்கள்
முதலாம் ஆண்டு விழா


குழுமங்கள்



மறுநாளான 06 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை சரியாக காலை 9.00 மணிக்கு, முதல் நாளின் கொண்டாட்டமும் குதூகலமும் சற்றும் குறைவின்றி அரங்கம் நிறை ஆளுமைகளுடன் அரங்கேறியது.

“குழல் இனிது யாழ் இனிது என்பார் மழலைச் சொல் கேளாதோர்” கொஞ்சும் மழலைகள் புடைசூழ புத்துணர்வுடன் முதல் நிகழ்ச்சியாக சிறுமி மோனிகா பரதநாட்டியமும், மற்றொரு சிறுமி மோனிகா வயலின் இசையுடன், சிறுமி ஜனனி வாய்ப்பாட்டுடன் இனிதே துவங்கியது சிறுவர் பேரவை.

சிறுவர் பேரவை நிர்வாக இயக்குனர் ஞா.விஜயகுமாரி வரவேற்புரை வழங்கிட “முத்தமிழே வாழ்க” எனும் தலைப்பில் மழலையர் கவியரங்கம் தொடங்கியது.

மிகச்சிறந்த படைப்பாளி பன்முக ஆளுமை முனைவர் ஓசூர் மணிமேகலை குழந்தையோடு குழந்தையாக மாறி தலைமையேற்று கவியரங்கினை சிறப்புற நிகழ்த்தினார்.

கவியரங்கம் நிறைவுற்றதும் மழலையர் மனம் மகிழும் வண்ணம் அவர்களை கௌரவித்து விருதுகள் வழங்கப்பட்டன.

அடுத்த நிகழ்ச்சியாக அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவையின் அவையினை அலங்கரிக்க சிறப்பு விருந்தாளர்கள் சான்றோர் பெருமக்களான ஓவியக்கவிஞர் அமுதபாரதி, தமிழ்ப் பல்கலைக்கழக பேராளுமை குறிஞ்சி வேந்தன், பாலயுவ புரஸ்கார் விருதாளர் மு முருகேஷ், ஊடகவியலாளர் கவிஞர் ஆரூர் தமிழ்நாடன், முத்தமிழ் நேசன் ஆசிரியர் அமுதா தமிழ்நாடன், திரைப்பட இயக்குனர் “யார்” கண்ணன், அருட்திரு பிலிப் சுதாகரன், அற்புத பேராளுமை வெற்றிப்பேரொளி, கவிஞர் ராணி லக்ஷ்மி ராம்பிரசாத் என மேடை முழுவதும் மிகப்பெரிய ஆளுமைகளால் நிறைந்திருந்தது.

அடுத்த நிகழ்வாக சாதனையாளர்கள் விருது வழங்கும் விழாவாக சாதனையாளர்கள் ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்தலும், பின் ஏற்புரையும் மிகச் சிறப்பாக அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவையின் நிறுவனர் தலைமையில் மிக அழகாக நடந்தது.

இதில் வாழ்நாள் சாதனையாளர்களாக பாவலர் தஞ்சை தர்மராசன், கவிஞர் கோவிந்தம்மாள் ரத்தினம், திருமதி மங்கள மேரி, கவிஞர் நீலகண்ட தமிழன், திருமதி வாழ்வரசி பாண்டியன், மருத்துவர் கவிக்கோ ஜெயக்குமார் பலராமன், முனைவர் செ.சு.நா.சந்திரசேகரன், எ.த.இளங்கோவென எட்டுத்திக்கும் இருந்து வந்திருந்த எட்டு பேராளுமைகளுடன் பாவலர் வீரா பாலச்சந்திரனும் மேடையில் அமர்ந்திருந்தனர்.

அவர்களை அறிமுகப்படுத்துதல் நிகழ்வில் பேச்சியம்மாள் பிரியா அவர்கள், முனைவர் சரஸ்வதி பாஸ்கரன், தாமரைச்செல்வி, பாண்டிச்செல்வி கருப்பசாமி, கல்பனா தர்மேந்திரா, கவிதா வேணுகோபாலென ஒவ்வொருவரும் எடுத்துரைத்த விதம் அரங்கையே அதிர வைத்தது.

மதிய விருந்து சரியாக 1.30 மணிக்கு, செவிக்கு உணவிட்ட ஆளுமைகளும் உடன் அமர வந்திருந்த அனைத்து கவிஞர்களும் வயிறார உணவு உண்பதற்கு அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.

மதிய இடைவேளை முடிந்தவுடன் மீண்டும் அரங்கம் நிறைய சிறப்பு விருந்தினர்களின் சிறப்புரை செவிக்கு விருந்தாகியது.

ஒவ்வொருவராக குறிஞ்சி வேந்தன், ஆரூர் தமிழ்நாடன், யார் கண்ணன் கவிதா ராஜசேகர், கவிஞர் ஜோசப், கவி செல்வா, கவிஞர் ஸ்ரீதேவி அவர்கள் மற்றும் நம்முடைய அமெரிக்க முத்தமிழ் நிறுவனர் உதய நேசன் அவர்களுடைய உரையுடனும் அனைவருக்கும் சிறந்த முறையில் சிறப்பு செய்யப்பட்டது.

அடுத்த நிகழ்வாக விருது வழங்கும் விழா முதலில் நல்லாசிரியருக்கான டாக்டர் இராதா கிருஷ்ணன் விருதை பட்டியல் படி சிவக்குமார் அவர்கள் எடுத்துரைக்க 68 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது அளிக்கப்பட்டது என்பதை மிகப் பெருமையுடன் கூறிக் கொள்கிறோம் .

அடுத்ததாக அமெரிக்க முத்தமிழ் தொலைக்காட்சி விருது பட்டிமன்றம், விவாத மேடை, ஏணிப்படிகள் நிகழ்ச்சி என அதில் பங்கு பெற்றோர் அனைவருக்கும் அளிக்கப்பட்டது.

குழுமம் தொடங்கியது முதல் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் அனைத்து கவிஞர்களுக்கும் மிகச் சிறப்பான முறையில் முத்தமிழ் விருது அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

அமெரிக்க முத்தமிழ் குழுமங்களின் நிறுவனர் உதயநேசன் அவர்களின் வாழ்த்தோடு முனைவர் சம்பத்குமார் அவர்களின் நன்றியுரையுடன் அமெரிக்க முத்தமிழ் இலக்கிய பேரவை குழுமங்களின் முதலாம் ஆண்டுவிழா கவிஞர்கள் அனைவரும் மலைச்சாரலில் நனைந்த மலர்களைப் போன்று சிரித்த முகத்துடன் தங்கள் இடம் நோக்கி நகர்ந்திட இருநாள் விழா இனிதே நிறைவுற்றது.








பேரவைக் குழுமங்கள்
விழா


பேரவை




அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்கள்






















இலக்கியப் பேரவைக் குழுமங்கள்
ஆண்டு விழா





